



TEMASEK

இப்போதே ஒன்றிணைந்து

**கவனிப்போம்**
**சிந்திப்போம்**
**செயல்படுவோம்**



## இன்று, நம் உலகம் ஆகக் கடுமையான நெருக்கடிநிலையை எதிர்நோக்குகிறது.

உருகிக்கொண்டிருக்கும் துருவ பனி முகடுகளையும், கடுமையான பருவநிலைகளையும், வெள்ளங்களையும், வறட்சிகளையும் **கவனித்திடுங்கள்**.

நம் பூமி அபாய விளிம்பான 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேலாகச் சூடேற நாம் அனுமதித்தால் என்ன நடக்கும் என்று **சிந்தித்துப் பாருங்கள்** — ஏற்கனவே பூமி ஒரு டிகிரி சூடேறிவிட்டது. நாம் ஒன்றுமே செய்யாதிருந்தால் விரைவில் மேலும் அரை டிகிரி சூடேறிவிடும்.

தூய்மைக்கேட்டையும் கழிவையும் குறைத்திட குறிக்கோளுடன் துணிச்சலாகச் **செயல்பட்டு**, 2030 ஆம் ஆண்டுக்குள் வெளியாகும் கரியமிலவாயுவைப் பாதியாகக் குறைத்திடுவோம்.

மக்கள், வாழ்க்கை, வயிற்றுப்பிழைப்பு அனைத்திற்காகவும் மேன்மேலும் நீடித்து நிலைக்கத்தக்கதொரு குளுமையான, மேம்பட்ட உலகை உருவாக்குவதற்கான முதலீட்டைச் செய்ய தெமாசெக் தயாராக இருக்கிறது.

சிறப்பானதையும், சரியானதையும், நல்லனவற்றையும் செய்திடுவோம்.

இப்போதே, ஒன்றிணைந்து...
காலம் கடப்பதற்குள்.

**temasekreview.com.sg**



# இப்போதே ஒன்றிணைந்து

## கவனிப்போம் சிந்திப்போம் செயல்படுவோம்

TEMASEK

## நீடித்து நிலைக்கத்தக்க மதிப்புக்காக முதலீடு

நாங்கள் பல தலைமுறைகளுக்காக முதலீடு செய்கிறோம் — நாங்கள் எதிர்காலத்தைக் **கவனித்து**, தீர்வுகளையும் வாய்ப்புகளையும் பற்றி தீர **சிந்தித்து**, மேன்மேலும் மேம்பட்ட, நீடித்து நிலைக்கத்தக்க உலகை உருவாக்கும் இலக்குடன் **செயல்படுகிறோம்**.

தெமாசெக்கின் நிதிநிலை பலாபலன் பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

### தொடங்கப்பட்டதிலிருந்து நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு

**S$313பி**
நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு
31மார்ச் 2019 அன்று




சந்தை மதிப்பு — பங்குதாரர் பங்குமுதல் — குறியிலிருந்து சந்தை வரையிலான அசைவு தவிர்த்த பங்குதாரர் பங்குமுதல்[4]

### உலகளாவிய வெளிப்பாடு[5,6]




### S$ மொத்த பங்குதாரர் வரவு[5] (%)

**1.49%**
பங்குதாரருக்குரிய ஓராண்டுகால வரவு




### மொத்த பங்குதாரர் சுழற்சியின் S$ வரவு[7] (%)

**9%**
10 ஆண்டுகாலத்தில் பங்குதாரரின் வரவு




## பொதுக் குறியீடுகள்

எங்களது *தெமாசெக் ஆய்வு*, கடன் நிலைக் குறிப்பு, தெமாசெக் முறிகள் ஆகியவை உறுதியான, பொறுப்புமிக்க அமைப்பாகத் திகழும் எங்கள் கடப்பாட்டைப் பல தலைமுறைகளாக வலுப்படுத்துகின்றன.

***தெமாசெக் ஆய்வு***
எங்களது முதலீட்டுப் பட்டியல், செயலாற்றல் ஆகியவற்றின் முக்கிய கூறுகளை வெளியிடுகிறது.

**தெமாசெக் கடன் விகிதங்கள்**
எங்களது கடன் தரத்தை எடுத்துக்காட்டுகின்றன.

**தெமாசெக் முறிகள்**
கடன் படர்வின்மூலம் எங்களது கடன் தரத்தைத் தெரியப் படுத்துகின்றன.

## தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு

எங்களது கடன் நிலைக் குறிப்பு, ஆதாய ஆற்றல், வட்டி காப்பீடு, கடனடைப்பு காப்பீடு ஆகிய மூன்று பரிமாணங்களில் தெமாசெக் நிலைநாட்டும் கடன் அளவீடுகளை[8] விவரிக்கிறது. ஒரு முதலீட்டு நிறுவனமாக நாங்கள் கட்டிக்காக்கும் நிதிநிலையின் ஆதாரப் பலத்தையும் அது பிரதிபலிக்கிறது. அதோடு, தெமாசெக்கின் கடன் தர அளவீட்டை மதிப்பிடவும் துணை புரிகிறது.

## முக்கிய கடன் விகிதங்கள்

வலதுபக்கம் காட்டப்பட்டுள்ள முக்கிய கடன் தரக் குறியீடுகள்[9] ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக் கட்டிக்காக்கும் நிதிநிலையின் அடிப்படையிலானவை. கடன்களை அடைத்து, வட்டியைச் செலுத்தக்கூடிய எங்கள் ஆற்றலை அவை பிரதிபலிக்கின்றன. பெருக்கல் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கடன் தரமும் உயர்வாக இருக்கும்.

தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றி மேல்விவரம் அறிய ஒளிவருடல் செய்யுங்கள்

**ஆதாய ஆற்றல்**

**21 மடங்கு**
மொத்த கடனால் வகுக்கப்பட்ட நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு[9]




**வட்டி காப்பீடு**

**22 மடங்கு**
வட்டிச் செலவினத்தால் வகுக்கப்பட்ட லாப ஈவு வருமானம்[9]




1 25 ஜூன் 1974 அன்று தெமாசெக் நிர்மாணிப்பு.
2 நிதியாண்டு 75, 25 ஜூன் 1974 அன்று தொடங்கி 31டிசம்பர் 1975 அன்று முடிவடைந்தது.
3 நிதியாண்டின் முடிவு 1993-க்கு முன்பாக இருந்த டிசம்பர் 31ம் தேதியிலிருந்து 1994 முதல் மார்ச் 31ம் தேதியாக மாற்றப்பட்டது.
4 31மார்ச் 2006 முடிவுற்ற நிதியாண்டிலிருந்து, கணக்கியல் தரங்களின்படி 20% துணை முதலீடுகள் சந்தைக்குரியதாகக் குறிக்கப்படவேண்டும்.
5 31மார்ச் 2019 நிலவரப்படி.
6 அடிப்படை சொத்துகளின் அடிப்படையிலான பங்கீடு.
7 31மார்ச் நிலவரப்படி.
8 ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின், அதாவது தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL) மற்றும் அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் (IHCs) ஆகியவற்றின் நிதி விவரங்களின் அடிப்படையிலானது. (IHCs) என்பன THPL–ன் நேரடியான மற்றும் நேரடியற்ற முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களாகும். இவற்றின் இயக்குநர் சபை அல்லது நிகரான ஆளுமை அவைகளில் THPL, முற்றிலும் சொந்தமான தெமாசெக் பிரைவெட் லிமிடெட் (TPL) மற்றும்/அல்லது TPL–ன் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் அல்லது நாமினிகள் உள்ளடங்குவர். THPL மற்றும் அதன் IHCs ஆகியவற்றின் அடிப்படை நடவடிக்கைகள் முதலீட்டு ஹோல்டிங், நிதியளிப்பு மற்றும்/அல்லது முதலீட்டு ஆலோசனையும் ஆலோசனை சேவைகளும் வழங்குதல் ஆகியன.
9 31மார்ச் முடிவுற்ற ஆண்டுக்குரியது.
10 சிங்கப்பூர் நிதி அமைச்சர் (ஒருங்கிணைப்பு) சட்டம் (அத்தியாயம் 183)-ன்கீழ், நிதி அமைச்சர், ஒரு நிறுவன அமைப்பாகக் கருதப்படுகிறார்.
11 சார்புள்ள செலவுகளில் நடைமுறை மற்றும் நிதியளிப்பு செலவுகள்; செயல்பாடு, சட்டம், தணிக்கை, ஆலோசனை மற்றும் இதர கட்டணங்கள் போன்ற பரிவர்த்தனை செலவுகள்; நிதிகளுக்கான நிர்வாகக் கட்டணங்கள்; இதர தொழில் செலவுகள் ஆகியன உள்ளடங்கும்.
12 லாபம் ஈட்டும் வழக்கமான நிறுவனங்களைப் போலவே தெமாசெக்கும் வரி செலுத்துகிறது மற்றும் வரி செலுத்துவதிலிருந்து அரசுரிமை விலக்கு கோருவதில்லை.

## ஒரு முதலீட்டாளராகச் சிறப்பாகச் செயல்படு

**சமுதாய முன்னேற்றம்**

**நீண்ட ஆயுட்காலம்**
நீண்ட ஆயுட்காலத்தால் அதிகரித்துவரும் தேவைகளை நிறைவேற்றுகிறோம்

**அதிகரித்துவரும் செல்வச்செழிப்பு**
அதிகரித்துவரும் செல்வச்செழிப்பால் எழும் பேரார்வங்கள், தொழில்நுட்பம் உருவாக்கித்தரும் வாய்ப்புகளுடன் நிறைவேற்றப்படுகின்றன

**நீடித்து நிலைக்கத்தக்க வாழ்க்கைமுறை**
நமது எதிர்காலத் தலைமுறைகளுக்காகச் சுற்றுப்புறத்தைக் காக்கும் தீர்வுகள் உருவாக்கப்படுகின்றன

**மேம்பட்ட, அறிவார்ந்த, நீடித்து நிலைக்கத்தக்க உலகை உருவாக்க**
முதலீடு செய்கிறோம்

உருமாறிவரும் தொழில்நுட்பங்கள், நீடித்து நிலைக்கத்தக்க வாழ்க்கை, நீண்ட ஆயுட்காலம், வருமானம் பெருகி வாழ்க்கை உயர்வடைவதால் மாறிவரும் பயனீட்டாளர் போக்குகள் ஆகியவற்றால் நேரும் அமைப்புமுறை மாற்றங்களில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்.

**தொழில்நுட்ப இயலாக்கம்**

**அதிக இணைப்புமிக்க உலகம்**
மின்னிலக்க உலகில் இணைந்திருக்க விரைவான, மேம்பட்ட வழிகளுடன் துணை புரிகிறோம்

**பொருளியல் பகிர்வு**
வளங்கள் அதிக செயலாற்றலோடும் அதிக வசதியான முறையிலும் பகிரப்படுகின்றன

**அறிவார்ந்த இயங்குமுறைகள்**
செயற்கை நுண்ணறிவோடும் இயந்திரவியலோடும் புதுமைகள் படைக்கிறோம்

## ஒரு நிறுவனமாகச் சரியானதைச் செய்

ஒரு முதலீட்டு நிறுவனமான எங்களின் நிதி ஆதாரங்களில் பெரும்பகுதி முதலீட்டாளராகவும் பங்குதாரராகவும் நாங்கள் நடத்தும் தொழிலிலிருந்து கிடைக்கின்றன.

**எங்களின் நிதி ஆதாரங்கள்**

எங்களது முதலீட்டுப் பட்டியலை மாற்றியமைக்கும்போது கிடைக்கும் **முதலெடுப்புகள்**

எங்களது முதலீட்டுப் பட்டியலிலிருந்து கிடைக்கும் **லாப ஈவுகள் மற்றும் பகிர்ந்தளிப்புகள்**

எங்களது பங்குதாரரிடமிருந்து கிடைக்கும் புதிய மூலதனம்[10]

வங்கிக் கடன்கள்

தெமாசெக் முறிகள் மற்றும் யூரோ வர்த்தகப் பங்குப் பத்திரங்கள் (ECP)

TEMASEK

**முதலீடுகள் மற்றும் அதைச் சார்ந்த செலவுகள்[11]**

பங்குதாரருக்கு லாப ஈவுகள்

சமூகங்களுக்கான அறக்கட்டளைகள்

அரசாங்கங்களுக்குச் செலுத்தும் வரிகள்[12]

தெமாசெக் முறிதாரர்களுக்கும் ECP பங்குதாரருக்கும் செலுத்தும் கட்டணம்

**எங்களின் நிதிப் பயன்பாடு**

**நாங்கள் நிர்வகிக்காதவை**

சிங்கப்பூர் மத்திய சேமநிதி சேமிப்புகள்

சிங்கப்பூர் அரசாங்க சேமிப்புநிதி

சிங்கப்பூர் வெளிநாட்டு சேமிப்புநிதி

## ஒரு பொறுப்பாளராக நல்லன செய்



வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நீடித்து நிலைக்கத்தக்க பாதையாக உயிர்ச்சூழலும் வளப்பமும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை தெமாசெக் ஊக்குவித்து வருகிறது.

மக்கள், வாழ்க்கை, வயிற்றுப்பிழைப்பு அனைத்தின் நலனுக்காகவும் மேன்மேலும் நீடித்து நிலைக்கத்தக்க, குளுமையான பூமியைக் கட்டிக்காக்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவசரமாகச் செயல்படுவது அவசியம்.

### ஏபிசி உலகை ஆதரிக்கிறோம்

abc WORLD

**விறுவிறுப்பான பொருளியல்** (ACTIVE ECONOMY)
உற்பத்தித்திறன்மிக்க வேலைகள்
நீடித்து நிலைக்கத்தக்க நகரங்கள்
நிறைவான வாழ்க்கை

**அருமையான சமுதாயம்** (BEAUTIFUL SOCIETY)
மீள்திறன்மிக்கத் தனிமனிதர்கள்
அனைவரையும் உள்ளடக்கும் சமூகங்கள்
நியாயமான சமுதாயங்கள்

**தூய்மையான பூமி** (CLEAN EARTH)
மாசில்லா காற்று
தூய்மையான தண்ணீர்
குளுமையான உலகம்

+65 9101 0207 என்ற எண்ணுக்கு “SUBSCRIBE” என அனுப்புங்கள்